# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1721/4 - 2011 අගෝස්තු 29 වැනි සඳුදා - 2011.08.29

*1721/4 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பீ. 11/79.*

### *1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்*

*அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2011, ஓகத்து 29.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தடுத்துவைக்கப்பட்டோர் மற்றும் விளக்கமறியலில் இடப்பட்டோர்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவந்த திகதிக்கு நேர்முன்னரான நாளன்று நடைமுறையிலிருந்து ஏதேனும் அவசர ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தடுத்துவைக்கப்பட்டுள்ள எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதன் மேல் உடனடியாக இயைபான நீதிவான் முன்னர் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய ஆளைத் தடுத்துவைப்பதற்கான நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

(2) (அ) இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த திகதிக்கு நேர்முன்னரான நாளன்று நடைமுறையிலிருந்த ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தவறொன்றைப் புரிதல் சம்பந்தமாக நீதிவானொருவரினால் விளக்கமறியலில் இடப்பட்டுள்ளவரும், அல்லது

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் சட்டவிரோதமான செயற்பாட்டைப் புரிவதில் தொடர்புபட்டிருந்தவரும் அல்லது சம்பந்தப்பட்டிருந்தவரும், அல்லது தொடர்புபட்டுள்ளவராக அல்லது சம்பந்தப்பட்டுள்ளவராக இருந்தவரென நியாயமான முறையில் சந்தேகிக்கப்படுகின்றவரும்,

ஆன எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், விளக்கமறியலில் இடப்பட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும். ஆட்களின் கட்டுக்காப்பும் அவர்களுக்குப் பிணை அளித்தலும் தொடர்பாக கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள், அதன்மேல், அத்தகைய ஆள் தொடர்பாக ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

3. (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படியான பிரகடனத்தின்மூலம் வெளிப்படுத்தப்பட்ட அவசரகால நிலைமை இல்லாதொழிந்துள்ளது மற்றும் (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, 2011, ஓகத்து 30 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியும் பயனும் கொண்டிராதொழிந்துள்ளது என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி நீதிமுறைக் கட்டுக்காப்புத் தவிர்ந்த அத்தகைய வேறு கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்பட்ட ஆளெவரும், 2011, ஓகத்து 30 ஆந் திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுறும்வரை விடுதலை செய்யப்படுதலாகாது.

ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய ஆள் தொடர்பில் முப்பது நாட்கள் கொண்ட காலப்பகுதி முடிவுறுமுன்னர் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் III ஆம் பாகத்தின் நியதிகளின்படியான தடுத்துவைத்தற் கட்டளையெதுவும் வழங்கப்படாவிடின், செய்யப்பட்ட சட்டத்தின் II ஆம் பாகத்தின் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறெதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய ஆள் ஒரு நீதிவான் முன்னர் கொணரப்பட்டு விளக்கமறியலில் இடப்பட்டிருந்தாலொழிய, அவர் எவ்வாளின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகின்றாரோ அவ்வாளின் கட்டுக்காப்பிலிருந்து உடனடியாக விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.